புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635
T/TN/2026/0316/6130/1505

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 268 | 03-04-2026 | வெள்ளி | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி

Volum 01 | Issue: 268 | 03-04-2026 | Friday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

# வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் மக்கள் நலன் காக்கும் கூட்டணிக்கும் துரோக கூட்டணிக்கும் இடையே தான் போட்டி...

## ஈரோட்டில் நடைபெற்ற திமுக வேட்பாளர்கள் அறிமுக கூட்டத்தில் முதல்வர் மு.க ஸ்டாலின் பேச்சு...

### பிரதமர் வருகையை முன்னிட்டு சென்னையில் 2 நாட்கள் ட்ரோன்கள் பறக்க தடை

சென்னை: ஏப்.3–

புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலையொட்டி பிரச்சாரம் மேற்கொள்ள பிரதமர் நரேந்திர மோடி இன்று (மார்ச் 3ம் தேதி) புதுச்சேரி செல்கிறார்.

அங்கு பிரச்சாரத்தை முடித்து விட்டு சென்னை திரும்பும் அவர் அன்று இரவு, சென்னை கிண்டியில் உள்ள தனியார் நட்சத்திர ஓட்டலில் தங்குகிறார்.

மறுநாள் காலை தமிழக பாஜக நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்துகிறார். பின்னர், மதியம் புறப்பட்டு கேரளா செல்கிறார்.

இதையொட்டி பாதுகாப்பு காரணங்களுக்காக மீனம் பாக்கம், கிண்டி ஆகிய பகுதிகள், பிரதமர் பயணிக்கும் வழித்தடங்கள் "சிவப்பு மண்டலமாக" அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அரசு ஏற்பாடுகளை தவிர 3 மற்றும் 4 ஆகிய 2 நாட்களும் இந்த பகுதியில் ட்ரோன் கேமராக்கள் மற்றும் ஆளில்லா வான்வழி கருவிகள் பறக்க விடுவதற்கும் தடை விதிக்கப்படுகிறது என சென்னை காவல் ஆணையர் அருண் தெரிவித்துள்ளார். பாதுகாப்பு பணியில் 3 ஆயிரம் போலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

ஈரோடு. ஏப்ரல். 03

தமிழகத்தில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் என்பது மக்கள் நல கூட்டணிக்கும் மக்கள் விரோத கூட்டணிக்கும் இடையே தான் போட்டி. என ஈரோட்டில் நடைபெற்ற வேட்பாளர்கள் அறிமுக கூட்டத்தில் முதல்வர் மு க ஸ்டாலின் பேசினார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் வருகின்ற ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெற இருக்கின்றது. இதனைத் தொடர்ந்து அடுத்த மாதம் மே 04 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது.

இந்த நிலையில் திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதிகளிலும் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டு தேர்தல் பிரச்சாரம் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு, தமிழக முதல்வர் திமுக தலைவருமான மு க ஸ்டாலின் கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

என்னை தொடர்ந்து நேற்று முன்தினம் திருச்சி மற்றும் கரூர் மாவட்டங்களில் திமுக மற்றும் மதன் கூட்டணி கட்சி வேட்பாளர்களை



ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்தார்.

தொடர்ந்து நேற்று ஈரோடு மாவட்டத்தில் உள்ள 8 சட்டமன்ற தொகுதி மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள காங்கேயம் தொகுதிகளில் போட்டியிடும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைத்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

இந்த தேர்தல் பிரச்சாரம் ஈரோடு அருகே உள்ள திண்டல் பஞ்சாபி ஹோட்டல் அருகே நடைபெற்றது.

கூட்டத்தில் ஈரோடு மேற்கு தொகுதி வேட்பாளர் சு. முத்துசாமி, மொடக்குறிச்சி வேட்பாளர் சா. செந்தில்நாதன், பெருந்துறை வேட்பாளர் தோப்பு என் டி வெங்கடாசலம், பவானி தொகுதி வேட்பாளர் கே ஏ சேகர் அந்தியூர் தொகுதி வேட்பாளர் எம். சிவபாலன், கோபிசெட்டிபாளையம் தொகுதி வேட்பாளர் எண். நல்லசிவம், பவானிசாகர் தொகுதி வேட்பாளர் பி எல் சுந்தரம் காங்கேயம் தொகுதி வேட்பாளர் மு பெ. சாமிநாதன் மற்றும் ஈரோடு கிழக்கு தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் அறிவிக்கப்படாத நிலையில் கை சின்னத்திற்கும், வேட்பாளர்களை அறிமுகப்படுத்தி தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது அவர் பேசும்போது... பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் மண்ணில் நின்று பேசுவதை பெருமையாக கருதுகிறேன் மேலும் தந்தை பெரியார் இல்லை என்றால் அண்ணா இல்லை அண்ணா இல்லை என்றால் கலைஞர் இல்லை கலைஞர் இல்லை என்றால் நாம் எல்லாம் இல்லை. தமிழ்நாட்டைப் பொறுத்த வரை நடைபெற இருக்கின்ற சட்டமன்றத் தேர்தல் என்பது மக்கள் நலனுக்காக பாடுபடும் கூட்டணிக்கும், மக்கள் விரோத, மக்கள் துரோக கூட்டணிக்கும் தான் போட்டி நடைபெறுகிறது.

கடந்த நம்முடைய ஐந்தாண்டு கால ஆட்சியில் எண்ணற்ற பல்வேறு திட்டங்களை கொண்டு வந்து மக்களுக்கான பல நல்ல திட்டங்களை செயல்படுத்தி உள்ளோம்.

அதில் குறிப்பாக பெண்களுக்கான விடியல் பயணம், மகளிர் உரிமைத்தொகை, காலை உணவு திட்டம், பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளுக்கு லேப்டாப் வழங்கும் திட்டம், தமிழ் புதல்வன் மற்றும் நான் முதல்வன் திட்டம் உள்ளிட்ட திட்டங்களை சொல்லிக் கொண்டே போகலாம் அதற்கு தற்போது நேரம் இல்லை.

தற்போது கூட 5 ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகையை ஒரு கோடியே 32 மகளிர் வங்கிக் கணக்குகளில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் பல்வேறு தொழிற்சாலைகளை கொண்டு வந்து தொழில்

(தொடர்ச்சி 3ம்பக்கம்....)



# சேலத்தில் அதிமுக-திமுக 7 தொகுதிகளில் நேருக்குநேர் போட்டி.

சேலம். ஏப்.3–

சேலம் மாவட்டத்தில் உள்ள 11 சட்டப்பேரவை தொகுதிகளில் 7 தொகுதிகளில் திமுக அதிமுக வேட்பாளர்கள் நேரடியாக களம்காண்கின்றனர்.

சேலம் மேற்கு தொகுதியில் கூட்டணி கட்சிகளான தேமுதிக பாமக நேரடியாக பலப்பரீட்சை நடத்துகின்றன.

தாமரை, மாம்பழம் துணையுடன் இரட்டை இலை

சேலம் மாவட்டத்தில் மொத்தமுள்ள 11 தொகுதிகளில் அதிமுக கூட்டணியில் அதிமுக 9 தொகுதிகளிலும், கூட்டணி கட்சியான பாமக மாம்பழம் சின்னத்தில் 2 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன. சேலம் தெற்கு, எடப்பாடி, சங்ககிரி, ஓமலூர், வீரபாண்டி, மேட்டூர், ஆத்தூர், கெங்கவல்லி, ஏற்காடு ஆகிய 9 தொகுதிகளில் களம்காணும் அதிமுக, ஆத்தூர், ஓமலூர் ஆகிய இரு தொகுதிகளை தவிர, 7 தொகுதிகளில் திமுகவை நேரடியாக எதிர்கொள்கிறது.

கொட்டும் முரசு, 'கை' துணையுடன் உதயசூரியன்

திமுக கூட்டணியில் திமுக 8 தொகுதிகளிலும், தேமுதிக 2 தொகுதிகளிலும், காங்கிரஸ் ஒரு தொகுதியிலும் களம்காண்கின்றன. திமுக பாமகவுடன் ஒரு தொகுதியிலும், தேமுதிக பாமக, அதிமுகவுடன் தலா ஒரு தொகுதியிலும், காங்கிரஸ் அதிமுகவுடன் ஒரு தொகுதியிலும் போட்டியிடுகின்றன.

யாருடன் யார்?

சேலம் தெற்கு தொகுதியில் அதிமுக சார்பில் ஜெ. வினோத்தும், திமுக சார்பில் லோகநாதனும் நேருக்குநேர் மோதுகின்றனர். கெங்கவல்லி தொகுதியில் அதிமுக வேட்பாளர் நல்லதம்பியை எதிர்த்துதிமுகவில்சின்னத்துரை களமிறக்கப்பட்டுள்ளார். வீரபாண்டி தொகுதியில் முதல்முறையாக தேர்தலை எதிர்கொள்ளும் அதிமுக வேட்பாளர் ஸ்ரீபாலாஜி சுகுமாருடன், திமுக வேட்பாளர் டாக்டர் தருண் பலப்பரீட்சை நடத்துகிறார்.

சங்ககிரியில் அதிமுக சார்பில் முன்னாள் எம்எல்ஏ வெற்றிவேலும், திமுக சார்பில் புதுமுகமான மணிகண்டனும் மோதுகின்றனர். எடப்பாடி தொகுதியில் 8 ஆவது முறையாக களமிறங்கும் எடப்பாடி கே. பழனிசாமியை, திமுக வேட்பாளர் காசி எதிர்கொள்கிறார்.

மேட்டூரில், அதிமுகவின் முன்னாள் எம்எல்ஏ ஜி. வெங்கடாசலத்தை எதிர்த்து திமுக சார்பில், புதுமுகமான மிதுன் சக்ரவர்த்தி நிறுத்தப்பட்டுள்ளார். இதேபோல, ஏற்காடு தொகுதியில், அதிமுக சார்பில் உஷா ராணியும், திமுக சார்பில் ரேவதியும் வேட்பாளர்களாக களமிறக்கப்பட்டுள்ளனர்.

இந்த 7 தொகுதிகளில் இரட்டை இலையும், உதயசூரியனும் நேருக்குநேர் மோதுவதால், போட்டி கடுமையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாம்பழமா? முரசா?

சேலம் மேற்கு தொகுதியில் அதிமுக கூட்டணியில் பாமக வேட்பாளர் மு. கார்த்தி களமிறக்கப்பட்டுள்ளார். அவரை எதிர்த்து திமுக கூட்டணியில் தேமுதிக வேட்பாளர் அழகாபுரம் ஆர். மோகன் ராஜ் நிறுத்தப்பட் ள்ளார்.

சேலம் வடக்கு தொகுதியில் திமுக சார்பில் களம்காணும் தற்போதைய அமைச்சர் ரா. ராஜேந்திரனை எதிர்த்து, பாமக சார்பில் மேட்டூர் தொகுதி எம்எல்ஏ சதாசிவம் களமிறக்கப்பட்டுள்ளார்.

ஓமலூர் தொகுதியில் தற்போதைய அதிமுக எம்எல்ஏ மணியை, தேமுதிக வேட்பாளர் இளங்கோவன் எதிர்கொள்கிறார். ஆத்தூர் தொகுதியில் அதிமுக வேட்பாளர் ஜெயசங்கரனுக்கு எதிராக, காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் மட்டும் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

சேலத்தில் கடந்த 2011 சட்டப்பேரவை தேர்தலில் 11 தொகுதிகளையும் வென்ற அதிமுக, 2016, 2021 தேர்தல்களில், அமைச்சர் ரா. ராஜேந்திரனை தவிர்த்து எஞ்சிய 10 தொகுதிகளையும் கைப்பற்றி அசுர பலத்துடன் மீண்டும் களமிறங்குகிறது.

தற்போது, யாருடன் யார் என்பது தெளிவாகியுள்ளதால், அதிமுக, திமுக உள்ளிட்ட பிரதான கட்சிகள், வேட்பாளர் அறிமுக கூட்டங்களை நடத்திமுடித்துள்ளன. இந்த நிலையில், வரும் நாள்களில் தகிக்கும் கோடை வெயிலுக்கு சற்றும் குறையாமல், பிரசார களமும் சூடுபறக்கும் என நம்பலாம்.



திமுக தலைமையிலான மதசார்பாற்ற முற்போக்கு கூட்டணியின் பரமக்குடி (தனி) தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட போகலூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் வேட்பாளர் கே.கே.கதிரவன் வேட்பாளர் அறிமுக கூட்டம் இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதியின் வேட்பாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் தலைமையில் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் கழக தேர்தல் பணிக்குழு தலைவர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் நிர்வாக பெருமக்கள், கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதியின் வேட்பாளர் மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதியின் வேட்பாளர் கழக தீர்மானக்குழு தலைவர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பரமக்குடி (தனி) சட்டமன்ற தொகுதி வேட்பாளர் போகலூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் கே.கே.கதிரவன் ஆகியோர் பரமக்குடியில் உள்ள செக்கிழுத்த செம்மல் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் அவர்களின் முழு திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் ஒன்றிய நகர் கழக செயலாளர்கள் கழக நிர்வாகிகள் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் பங்கேற்றனர்.

# தமிழ்நாட்டில் முதல் நீர் மோர் பந்தல் பொதுமக்களுக்கு திறக்கப்பட்டுள்ளது



நடிகர் ராகவா லாரன்ஸ் மக்கள் சேவை நற்பணி மன்றம் சார்பில் பல் பொதுமக்களுக்கும் நடிகர் ராகவா லாரன்ஸ் அவர்களின் பெயரை வைத்து பல சேவைகள் செய்து இருக்கிறார்கள் மற்றும் பொதுச் செயலாளர் சங்கர் அண்ணா அவர்களின் ஆலோசனை ஏற்று விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் சத்தியமங்கலம் கிராமத்தில் செஞ்சி ஒன்றிய தலைவர் சந்தோஷ் லாரன்ஸ் முன்னிலையில் சத்தியமங்கலம் நிர்வாகி மணி லாரன்ஸ் முரளி இவர்களின் ஏற்பாட்டில் நீர் மோர் பந்தல் பொதுமக்களுக்கு தாகத்தை தீர்க் நீர் மோர் பந்தல் விழுப்புரம் மாவட்ட தலைவர் தலைவர் பாசமிகு வழக்கறிஞர் தமிழ் லாரன்ஸ் அவர்கள் திறந்து வைத்தார் பொது மக்களுக்கு நீர் மோர் தர்பூசணி பொது மக்களுக்கு கொடுத்தும் மகிழ்ந்தார் இன்னும் விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் செஞ்சி வல்லம் மேல்மலையனூர் கோலியனூர் விழுப்புரம் என பல்வேறு இடங்களிலும் இன்னும் ஒரு பந்தல் அவருடன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கோபி லாரன்ஸ் துணை ஒருங்கிணைப்பாளர் அருண் லாரன்ஸ் வழக்கறிஞர் அணி மகேஷ் விழுப்புரம் மகளிர் அணி தலைவி கலைச்செல்வி திருநங்கை அணி விழுப்புரம் மாவட்ட ஒருங்கிணைப் பாளர் குமாரி விழுப்புரம் டாக்டர் சலீமா மேல்மலையனூர் ஒன்றிய தலைவர் வெங்கடேஷ் செஞ்சி நகரம் அன்னை வீரா வல்லம் ஒன்றியம் சந்தானம் மற்றும் சென்று ஒன்றியம் ஜோதி ஆறுமுகம் வேலு குகேஷ் ஸ்ரீகாந்த் சந்துரு ஜீவா ஆண்டவன் ஏழுமலை பிரவீன் தனுஷ் கணபதி ஒளிசாரதி பசுபதி கார்த்தி தமிழ் சுபாஷ் தீனா தமிழ் மதன் வல்ல ஒன்றியம் பாபு முருகன் சூர்யா சூரிய பாலா ரேணு முனியப்பன் ராமச்சந்திரன் அருண் முல்லை திமாக்கு லோகேஷ் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

# தமிழக வாழ்வுரிமைக் கட்சி மாவட்ட செயலாளர் அணைக்கட்டு சட்டமன்ற வேட்பாளர்



பெயர்: வ.வினோத்கண்ணா.

தந்தை: பூ.வஜ்ரவேலு கவுண்டர். மனைவி :வி.மீனா

குழந்தைகள்: வி. பாரிவேந்தன், வி. ஜான்சிராணி. பிறந்த தேதி :2.06.1982 படிப்பு 10 ம் வகுப்பு ஜாதி: இந்து வன்னியர் தொழில்: ஆட்டோ ஓட்டுநர் சொந்த ஊர்: கீழ் மொணவூர், வேலூர் ஊராட்சி ஒன்றியம், வேலூர் மாவட்டம். கட்சிப் பொறுப்பு: வேலூர் மேற்கு மாவட்ட செயலாளர். அரசியல் அனுபவம் (வேலூர் மாவட்ட பாட்டாளி ஆட்டோ ஓட்டுநர் முன்னாள் சங்கத் தலைவர்)

தமிழக வாழ்வுரிமைக் கட்சி மேற்கு மாவட்ட செயலாளர் தற்போதைய பொறுப்பு

# கரூரில் விஜய் கூட்டத்தில் 41 பேர் பலியான வழக்கு ஆதவ் அர்ஜுனா மீது சிபிஐ பிடி இறுகுகிறது

சேலம்: ஏப்.3–

தவெக தேர்தல் பிரசார மேலாண்மை பொதுச்செயலாளராக இருப்பவர் ஆதவ் அர்ஜுனா. இவர் வில்லிவாக்கம் தொகுதியில் தவெக சார்பில் போட்டியிடுகிறார். இவர் தொடர்ந்து திமுக மீது பொய்யான குற்றச்சாட்டுகளை கூறி வருகிறார். நடிகர் விஜய்யின் பிரசாரத்திற்கான ஏற்பாடுகளை ஆதவ் அர்ஜுனா தான் செய்து வருகிறார். இவர் காட்டும் வழியை தான் நடிகர் விஜய்யும் பின்பற்றுகிறார். குறிப்பாக கரூர் பொதுக்கூட்டத்தின் போது போலீஸ் அதிகாரிகள் விஜய்யின் வாகனத்தை தடுத்து நிறுத்தி உள்ளே செல்ல வேண்டாம் வாகனத்தை இங்கே நிறுத்துங்கள், அதையும் தாண்டி சென்றால் பொதுமக்கள் பாதிக்கப்படுவார்கள் என எடுத்து கூறினர். ஆனால் ஆதவ் அர்ஜுனா தான் நாங்கள் போலீசார் கூறுவதை ஏற்றுக்கொள்ள மாட்டோம். எந்த இடத்தில் எங்களது வாகனம் நிற்க வேண்டுமோ அங்கு தான் நிறுத்துவோம் என கூறி கூட்டத்தின் நடுவே வாகனத்தை கொண்டு சென்றனர்.

இதன் காரணமாக கூட்டத்தில் கடும் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் இறந்துபோனதற்கு ஆதவ் ஆர்ஜுனா தான் முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது. நிலைமை மோசமான பிறகே அங்கேயிருந்து வாகனத்தை அப்புறப்படுத்தி சென்றனர். இடைப்பட்ட நேரத்தில் 41 பேர் பலியாகினர்.இதுதொடர்பாக சிபிஐ பதிவு செய்த எப்ஐஆரில் ஆதவ் அர்ஜுனா பெயரும் இடம் பெற்றுள்ளது. இதுதொடர்பாக டெல்லியில் அவர் சிபிஐயிடம் ஆஜராகியுள்ளார்.

தொடர்ந்து அவரிடம் சிபிஐ அதிகாரிகள் கிடுக்கிப்பிடி விசாரணை நடத்தி வருகின்றனர். ஆதவ் அர்ஜுனா மீது குற்றம் இருப்பது உறுதியாகி உள்ளதாக தகவல்கள் வெளியாகி வருகிறது.

# வினோதமான தோற்றத்தில் வேட்புமனு தாக்கல் செய்த சுயேட்சை வேட்பாளர்..!

வந்தவாசி, ஏப் 03:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த கீழ்க்கொடுங்காலூர் வட்டம் , மங்கலம் மாமண்டூர் கிராமத்தை சேர்ந்த சமூக ஆர்வலர் பி. பொன்னம்பலம். இவர் வந்தவாசி (தனி) சட்டமன்றத் தொகுதிக்கு சுயேட்சை வேட்பாளராக வேட்பு மனு தாக்கல் செய்ய உடல் முழுவதும் இலை மற்றும் தழைகளை அணிந்தவாறு ஆதிவாசி போன்று வேடமிட்டு தனது வேட்புமனுவை தேர்தல் நடத்தும் அலுவலர் ,எஸ்.ஆர்.என்.மதுசெழியன் அவர்களிடம் வழங்கினார். இயற்கையும் பசுமையும் தான் வாழ்க்கைக்கு வழிகாட்டும் என்று வலியுறுத்தி இத்தகைய வேடத்தில் வந்ததாக கூறினார். மேலும் இத்தகைய வினோதமான தோற்றத்தை கண்ட பொதுமக்கள் இவரை ஆச்சரியத்துடன் பார்த்தனர்.





ஈரோடு தந்தை பெரியார் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை பல்நோக்கு உயர் சிறப்பு சிகிச்சை பிரிவு பகுதியில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி வாக்காளர் விழிப்புணர்வு குறித்த துண்டு பிரசுரங்களை செவிலியர் கல்லூரி மாணவியர்களுக்கு வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.




விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் அங்காளம்மன் கோவிலில் நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை புரிந்து தரிசனம் செய்து வரும் நிலையில் பங்குனி மாத பௌர்ணமி தினத்தை முன்னிட்டு அதிகாலை மூலவர் அம்மனுக்கு பால் தயிறு சந்தனம் உள்ளிட்ட வாசனை திராவிடங்கள் சிறப்பு அலங்காரம் செய்து மகா தீபம் ஆராதனை நடைபெற்றது பக்தர்கள் சாமி தரிசனம் செய்து திருக்கோவில் வளாகத்தில் உள்ள மண்டபத்தில்108 பெண்கள் அமர்ந்து திருவிளக்கு பூஜையில் ஈடுபட்டனர் கோவில் பூசாரி அம்மனைப் பற்றி பாடல் பாடினார் ஏராளமான பெண்கள் திருவிளக்கு பூஜையில் அம்மனை வழிபட்டனர் விழாவிற்கான இயற்பாட்டினை கோவில் உதவியாளர் சக்திவேல் குழு அறங்காவலர் தலைவர் ஏழுமலை அறங்காவலர் சுரேஷ் மதியழகன் பச்சையப்பன் சரவணன் வடிவேலு சந்தானம் மேலாளர் சதீஷ் உள் துரை மணியன் அண்ணாமலை காசாளர் மணி உள்ளிட்ட கோவில் பணியாளர்கள் செய்திருந்தனர்.

# பங்குனி திருவிழா பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கல்.



ஈரோடு மாநகராட்சி பாப்பாத்திக்காடு இரண்டாவது வீதி முனிசிபல் காலனியின், அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பாலமுருகன் கோவிலில் பங்குனி உத்திர திருவிழா சிறப்பாக நடைபெற்றது. பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. விழாவிற்கான ஏற்பாடுகளை விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

**Format C-1**

(For candidatate to publish in Newspapers, TV)

Declaration about criminal cases

As per the judgement dated 25th September 2018, of Honourable Supreme Court in WP (Civil) No 536 of 2011( Public interest Foundation &Ors. Vs Union ofIndia &Anr)

Name of the candidate: R. KATHIRAVAN, 2/461, Ponnambalam patty, Manapparai, Trichy-621315.

Name of the Political Party: TamilagaVettriKazhagam

(Independent candidates should write "Independent" here)

Name of the Election : Tamilnadu Legislative Assembly-2026

Name of Constituency:138-Manapparai

I R. KATHIRAVANa candidate for the abovementioned election, declare for public information the following details about my antecedents:

(A) Pending Criminal Cases

| Sl.No | Name of the Court | Case No anddated | Status of the Section(s) | Section(s) of Acts concerned and brief description of offence(s) |
|---|---|---|---|---|
| 1. | NIL | FIR NO: 32/2019 26.2.2019 | case charged and same was yet to be taken court | IPC 294(b),323 |
| 2. | NIL | FIR NO: 383/2025 20.8.2025 | case not charged | Tnoppd Act 4A(1a),4B |
| 3. | NIL | FIR NO: 156/2026 20.8.2025 | case not charged | 189(2),126(2),292,287,BNS Act |

(B) Details about cases of conviction for criminal offences

| Sl.No | Name of Court and date(s) of Order(s) | Description of offences & punishment imposed | Maximum punishment Imposed |
|---|---|---|---|
| 1. | Additional district magistrate of civil and criminal justice department , Vedasandur.12.05.2025 | Charges were framed under sections 59(i),63 of the food safety and standars Act,2006 | Oneday in jail until the court adjourns, fine of Rs.23,000 |

# அதிமுக மாநில செயலாளர் அன்பழகன் ஆட்டுப்பட்டி, ரோடியர்பேட்டை ஆகிய பகுதிகளில் துண்டு பிரசரங்களை வழங்கி இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.



புதுச்சேரி, ஏப்.3–

புதுச்சேரி உப்பளம் தொகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணியில் அதிமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளரான அதிமுக மாநில செயலாளர் அன்பழகன் அவர்கள் நேற்று ஆட்டுப்பட்டி, ரோடியர்பேட்டை ஆகிய பகுதிகளில் வீடுவீடாக சென்று வாக்காளர்களிடம் துண்டு பிரசரங்களை வழங்கி இரட்டை இலை சின்னத்திற்கு வாக்களிக்க கோரி வாக்கு சேகரிப்பில் ஈடுப்பட்டார். அப்போது வாக்காளர்களிடம் அன்பழகன் அவர்கள் பேசியதாவது:

நடைபெற இருக்கும் சட்டமன்ற தேர்தலில் புதுச்சேரி மாநிலத்தில் இந்தியா கூட்டணி அழிவு பாதையை நோக்கி சென்று விட்டது.பதவி வெறியில் இந்த கூட்டணியில் உள்ள திமுகவும் காங்கிரஸும் கம்யூனிஸ்ட், விசிகவும் ஒருவரை ஒருவர் எதிர்த்து தேர்தலில் போட்டியிடுகின்றனர். யூனியன் மாநிலமான புதுச்சேரியில் ஒரு கூட்டணி அமைக்க திராணியற்ற திமுக முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் அதிமுக பற்றியும் அதிமுகவின் பொதுச் செயலாளர் அவர்களைப் பற்றியும் குறை கூறுவதற்கு எந்த தகுதியும் அருகதியும் கிடையாது . காங்கிரஸ் திமுக கூட்டணி என்பது ஒரு சந்தர்ப்பவாத கூட்டணி இந்த சந்தர்ப்ப வாத கூட்டணிக்கு மக்கள் இந்த தேர்தலில் சரியான பாடத்தை புகட்டுவார்கள்.

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு உப்பளம் பகுதியில் உள்ள மக்களுக்கு சுகாதாரமான குடிதண்ணீர் வழங்கப் பட்டது. தற்போது சுத்திகரிக்கபடாத தண்ணீர் எங்கிருந்தோ கொண்டு வரப்பட்டு என்னால் கட்டப்பட்ட டேங்கில் ஏற்றப்பட்டு அந்த நீர் சுத்திகரிக் கப்படாமலேயே மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. இந்த தண்ணீர் குடிப்பதற்கு ஏதுவான தண்ணீர் அல்ல .அளவுக்கு அதிகமான உப்பும் , தாமிரமும் கலந்துள்ள தால் பொதுமக்களுக்கு பல்வேறு தொற்று நோய்களும், கிட்னி கல்லீரல் பாதிப்பு சம்பந்தமான நோய்களும் தொடர்ந்து வருகிறது. வாழ மக்களுக்கு சுகாதார மான குடிதண்ணீரை வழங்க வேண்டியது அரசு மற்றும் அந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரின் கடமையும் பொறுப்பும் ஆகும். இந்த கடமையும் பொறுப்பும் கூட தற்போது உள்ள திமுக சட்டமன்ற உறுப்பினர் திரு கென்னடி அவர்கள் செய்யவில்லை. நான் மறுபடியும் சட்டமன்ற உறுப்பினர் தேர்வு செய்யப்பட்டவுடன் உப்பளம் தொகுதி முழுவதும் நல்ல சுகாதாரமான குடிநீர் மக்களுக்கு தடையின்றி விநியோகம் செய்ய பாடுபடுவேன் .இவ்வாறு அவர் பேசினார்

இவ்வாறு அவர் பேசினார்.

# சேலத்தில் அம்மனுக்கு அணிவிக்கப்பட்ட வெள்ளி கிரீடம் திருடியவனை வெளுத்தெடுத்த போலீஸ்.

சேலம். ஏப்.3–

சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே அம்மன் தலையில் அணியப்பட்டிருந்த வெள்ளி கிரீடத்தை திருடிய நபர் போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மக்கள் நடமாட்டம் இல்லாத நேரம், கிரீடத்தை நேக்காக திருடியவர், சிசிடிவியால் சிக்கியதன் பின்னணி என்ன? சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே உள்ள சீலியம்பட்டி அம்மன் கோயிலில், 25 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான வெள்ளி கிரீடத்தை மர்ம நபர் ஒருவர் நேக்காக கொள்ளையடித்துச் சென்றுள்ளார். மறுநாள் வழக்கம்போல கோயிலைத் திறந்த பூசாரி, அம்மனின் வெள்ளி கிரீடம் காணாமல் போனதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். உடனே, கோயில் நிர்வாகத்தினருக்கு தகவல் கொடுத்து சிசிடிவி காட்சியை ஆய்வு செய்ய, மர்ம நபரின் திருட்டு வேலை தெள்ளத் தெளிவாகப் பதிவாகி இருந்தது.

இது குறித்து கோவில் நிர்வாகம், மல்லியகரை காவல் நிலையத்தில் வீடியோ ஆதாரத்துடன் புகார் அளிக்க வழக்குப் பதிவு செய்த போலீசார் தேடுதல் வேட்டையைத் தொடங்கினர். சிசிடிவியில் பதிவான கொள்ளையனின் முகத்தை வைத்து விசாரிக்க, அதில் ஆத்தூர் உடையார்பாளையத்தைச் சேர்ந்த வாசு என்பவர் வசமாகச் சிக்கினார். மே பேகுனா சாப் பாணியில், நல்லவர் போல நடித்தவரை சிறப்பாக கவனித்து, உண்மையைக் கக்க வைத்துள்ளனர்.

கோயில்களில் உள்ள சுவாமி சிலைகளுக்கு அலங்காரம் செய்யும் தொழில் செய்து வருவதாகவும், செலவுக்குப் பணம் இல்லாததால் கோயிலில் உள்ள அம்மன் தலையில் வைக்கப்பட்டிருந்த 25 ஆயிரம் மதிப்புள்ள வெள்ளி கிரீடத்தைத் திருடியதாகவும் வாசு ஒப்புக்கொண்டார்.

இதனையடுத்து வாசு மீது எப்.ஐ.ஆர். பதிவு செய்த போலீசார், அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். மேலும், அடகு வைக்கப்பட்ட அம்மன் கிரீடத்தை மீட்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர். ஊரே உறங்கும் நேரம் மெகா கொள்ளையில் ஈடுபட்ட கேடி திருடன், போலீஸில் சிக்கியிருப்பதால் சீலியம்பட்டி கிராம மக்கள் நிம்மதி அடைந்துள்ளனர்.

# கதிர்காமத்தில் திமுக வேட்பாளர் வடிவேலு தீவிர வாக்கு சேகரிப்பு:

## வீடு வீடாகச் சென்று ஆதரவு கோரினார்!

புதுச்சேரி, ஏப்.3–

புதுச்சேரி சட்டமன்றத் தேர்தல் வரும் ஏப்ரல் 9ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில், கதிர்காமம் தொகுதி திமுக வேட்பாளர் வடிவேலு, தொகுதிக்கு





உட்பட்ட பகுதிகளில் சூறாவளிப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

நேற்று 02.04.26 காலை, கதிர்காமம் தொகுதிக்கு உட்பட்ட ஆனந்தம் நகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள குடியிருப்பு பகுதிகளில் வேட்பாளர் வடிவேலு தனது ஆதரவாளர்களுடன் வீடு வீடாகச் சென்று தீவிரமாக வாக்கு சேகரித்தார். பொதுமக்களை நேரில் சந்தித்து சால்வை அணிவித்தும், துண்டுப் பிரசுரங்களை வழங்கியும் அவர் ஆதரவு கோரினார்.

வாக்கு சேகரிப்பின் போது வேட்பாளர் வடிவேலு மக்களிடம் பேசியதாவது:

திமுக அரசின் மக்கள் நலத்திட்டங்கள் குறித்தும், அவை அடித்தட்டு மக்களைச் சென்றடைந்த விதம் குறித்தும் விரிவாக விளக்கினார்.

கதிர்காமம் தொகுதியின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், குடிநீர் மற்றும் சாலை வசதிகளைச் சீரமைக்கவும் தான் வைத்துள்ள புதிய திட்டங்களை மக்களிடம் எடுத்துரைத்தார்.

தொகுதி மக்களின் தேவைகளை அறிந்து செயல்பட, வரும் தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து தன்னை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த பிரச்சாரத்தின் போது திமுக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சித் தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். வழிநெடுகிலும் பொது மக்கள் வேட்பாளருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். தேர்தல் நெருங்கி வருவதால், கதிர்காமம் தொகுதியில் அரசியல் களம் தற்போது பெரும் பரபரப்பைக் கண்டுள்ளது.

# வருகின்ற சட்டமன்றத் தேர்தலில்.....

(முதல்பக்கத் தொடர்ச்சி)

வளர்ச்சிக்கும் வேலை வாய்ப்புக்கும் வழிவகை செய்துள்ளது இந்த திராவிடம் ஆனால் ஆட்சி.

ஈரோடு மாவட்டத்தை பொருத்தவரை அத்திக்கடவு அவினாசி திட்டம் முழு அளவில் செயல்படுத்தப்பட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக உள்ளது. மேலும் ஈரோடு கோபிசெட்டிபாளையம் அந்தியூர் சத்தியமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயத்திற்கான பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் சுதந்திர போராட்ட மாவீரர் தீரன் சின்னமலைக்கு முழு உருவ பெண்களை சிலை அமைக்கப்பட்டும், மாவீரர் பொல்லான் அவர்களுக்கு நினைவு மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் பால்வளப் புரட்சிக்கு வித்திட்ட ஐயா பரமசிவம் மற்றும் விவசாயத்திற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஐயா இயேசுவின் போன்றவர்களுக்கு திருஉருவ சிலை ஈரோடு மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இது போன்ற ஈரோடு மாவட்டத்திற்கு எண்ணற்ற பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை இந்த திராவிட மாடல் அரசு இந்த ஆட்சியில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இது போன்று மக்கள் நலத்திட்டங்கள் தொடர இந்த திராவிடம் மாடல் ஆட்சி தொடர நீங்கள் திமுக மற்றும் மதசார்பற்ற கூட்டணி வேட்பாளர்களை ஆதரிக்க வேண்டும். அதற்காக உதயசூரியன் மற்றும் கதிர் அருவாள் சின்னங்களில் வாக்களிக்க வேண்டும்.


எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று சொல்கிறார். இப்படி ஆட்சியில் தான் பொள்ளாச்சியில் அவர்களுடைய கட்சிக்காரர்களால் பல இளம் பெண்கள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டனர். எடப்பாடி பழனிசாமியின் பொல்லாத ஆட்சிக்கு பொள்ளாச்சியே சாட்சி என இன்று வரை தமிழக மக்கள் பேசி வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நிவாரணம் வழங்கி குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை வாங்கி கொடுத்த ஆட்சி இந்த திரவ மாடல் ஆட்சி.

தமிழகம் மென்மேலும் வளர பல்வேறு வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்த திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியை ஆதரிக்க வேண்டும் இங்கு போட்டியிடக்கூடிய நம்முடைய வெற்றி வேட்பாளர்களுக்கு வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டும். இவ்வாறு தமிழக முதல்வர் பேசினார். கூட்டத்தில் வேட்பாளர்கள், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே இ பிரகாஷ், முன்னாள் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி, திமுக துணை பொது செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்பி, முன்னாள் எம்பி எம். கந்தசாமி, சிபிஎம் முன்னாள் மாநில செயலாளர் முத்தரசன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

முதல்வர் ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரத்தை முன்னிட்டு திண்டல் பகுதி முழுவதும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

# புதுச்சேரி 2026: வீராம்பட்டினத்தில் அமைச்சர் லட்சுமி நாராயணன் தீவிர வாக்கு சேகரிப்பு - மீனவர்களுக்குப் புதிய வாக்குறுதிகள்!



புதுச்சேரி, ஏப்ரல் 3:

புதுச்சேரி சட்டமன்றத் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், என்.ஆர். காங்கிரஸ் கட்சியின் முக்கியத் தலைவரும் அமைச்சருமான லட்சுமி நாராயணன், வீராம் பட்டினம் பகுதியில் தனது கட்சியின் வேட்பாளர் ஐயப்பன் அவர்களுக்கு ஆதர வாகத் தீவிரப் பிரச் சாரத்தில் ஈடுபட்டார்.

மீனவ கிராமமான வீராம்பட்டினத்தில், அமைச்சர் லட்சுமி நாராயணன் வீடு வீடாகச் சென்று 'ஜக்கு' சின்னத்திற்கு வாக்களிக்குமாறு பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டார். வழிநெடுகிலும் மீனவ மக்கள் அமைச்சருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

பிரச்சாரத்தின் போது மீனவ மக்களின் குறைகளைக் கேட்டறிந்த அமைச்சர், அங்கு நடைபெற்ற கூட்டத்தில் பேசியதாவது:

"மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே எங்கள் அரசின் முதல் இலக்கு. வீராம்பட்டினம் மீனவ கிராமத்தின் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், மீன்பிடி உபகரணங்களுக்கான மானியங்களை உயர்த்தவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்."

என்.ஆர். காங்கிரஸ் பாஜக கூட்டணி அரசின் கடந்த கால சாதனைகளை எடுத்துக்கூறிய அமைச்சர், புதுச்சேரியின் வளர்ச்சி தொடர மீண்டும் 'ஜக்கு' சின்னத்திற்குப் பெரும்பான்மையான வாக்குகளை அளித்து ஐயப்பன் அவர்களை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என மீனவ மக்களிடம் கோரிக்கை வைத்தார்.

இந்த நிகழ்வில் கட்சி நிர்வாகிகள், கூட்டணி கட்சித் தொண்டர்கள் மற்றும் ஏராளமான மீனவ மக்கள் கலந்து கொண்டனர்.


# சேலத்தில் தீவிர வாக்கு சேகரிப்பில் திமுகவினர்.



சேலம் தெற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அன்னதானப்பட்டி பகுதி மற்றும் கொண்டலாம்பட்டி பகுதியில் உள்ள முக்கிய பிரமுகர்களை சந்தித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் லோகநாதன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்யுமாறு ஆதரவு திரட்டிய சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன்.இவர் சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதியில் வேட்பாளராக போட்டியிட உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.இந்நிகழ்வில்,கழக நிர்வாகிகள்,தோழமை கட்சிகளின் நிர்வாகிகள்,கழக உடன்பிறப்புகள்,பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையத்தில் பயண்பாடற்று கிடக்கும் சமூக நல நவீன சுத்திகாிக்கப்பட்ட தானியங்கி குடிநீர் நிலையம்.






கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள புதிய பேருந்து நிலையத்தில் 2022 2023 ஆண்டு நாடாளுமன்ற தொகுதி வளர்ச்சி நிதியில் கிருஷ்ணகிரி நாடாளு மன்ற உறுப்பினர் A.செல்லக்குமார் துவங்கி வைத்த சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் பயன்பாடு இன்றி கிடக்கிறது பல இலடசம் ரூபாய் மக்கள் வரி பணம் செலவு செய்து கட்டப்பட்டு பயண்பாடு இன்றி பாழடைந்து பழுதடைந்து இருப்பது குறித்து பொது மக்கள் சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பி உள்ளர். கோடை காலம் என்பதால் விரைந்து பயண்பாட்டிற்க்கு கொண்டுவர பொது மக்கள் கோரிக்கை

# ஈரோடு மேற்கு தொகுதியில்... திமுக வேட்பாளர் அமைச்சர் சு. முத்துசாமி வேட்பு மனு தாக்கல் செய்தார்..



ஈரோடு. ஏப்ரல். 03

நடைபெற இருக்கின்ற சட்டமன்ற பொதுத் தேர்தலில் ஈரோடு மேற்கு தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் அமைச்சர் சு. முத்துசாமி நேற்று தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை பொதுத் தேர்தலில் 2026 வருகின்ற ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெற இருக்கின்றது. வாக்கு எண்ணிக்கை மே மாதம் நான்காம் தேதி நடைபெற உள்ளது.

இந்த நிலையில் தமிழ்நாடு முழுவதும் திமுக மதசார்பற்ற கூட்டணி அமைத்து வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஈரோட்டில் உள்ள எட்டுத் தொகுதிகளுக்குமான வேட்பாளர்களை நேற்று திமுக தலைவரும் முதலமைச்சர் ஆன மு க ஸ்டாலின் ஈரோடு அருகே உள்ள திண்டல் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் அறிமுகம் செய்து வைத்து பேசினார்.

இதனைத்தொடர்ந்து ஈரோடு மேற்கு தொகுதியில் போட்டியிடும் தெற்கு மாவட்ட திமுக செயலாளர் அமைச்சருமான சு. முத்துசாமி, ஈரோடு கோட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள அலுவலகத்தில், மேற்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும் கோட்டாட்சியர் தலைவர் ஆன சிந்துஜாவிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்பி கந்தசாமி, திமுக துணை பொதுச்செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்பி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே இ பிரகாஷ், முன்னாள் எம்எல்ஏ வி சி சந்திரகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# புதுச்சேரி தேர்தல் 2026: முத்தியால்பேட்டை தொகுதியில் 'ஈரம்' ராஜேந்திரன் அதிரடி வாக்குறுதிகள்!



புதுச்சேரி, ஏப்.3–

வருகின்ற சட்டமன்றத் தேர்தலில், புதுச்சேரி முத்தியால்பேட்டை தொகுதி காங்கிரஸ் கட்சி வேட்பாளராக ஈரம் ராஜேந்திரன் (கை சின்னம்) களம் காண்கிறார். "அரசியல் கடந்து இணைவோம்... வளர்ச்சியை நோக்கி உயர்வோம்!" என்ற முழக்கத்தோடு, தொகுதி மக்களின் நலனுக்காகப் பல்வேறு சிறப்புத் திட்டங்களை அவர் தனது தேர்தல் அறிக்கையாக வெளியிட்டுள்ளார்.

பெண்கள், மாணவர்கள் மற்றும் நலிந்த பிரிவினரை இலக்காகக் கொண்டு அவர் அறிவித்துள்ள முக்கிய வாக்குறுதிகள்.

முத்தியால்பேட்டையைச் சேர்ந்த முதலாம் தலைமுறை பட்டதாரி மாணவிகளுக்கு, அவர்களின் இளங்கலை படிப்பு முடியும் வரை மாதம் ரூ1,000 ஊக்கத்தொகை நேரடியாக வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

5 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்குத் தரமான இலவச டியூஷன் வசதி செய்து தரப்படும்.

NEET, JEE, LDC, UDC போன்ற போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்குத் தொகுதியிலேயே இலவச பிரத்யேகப் பயிற்சி மையம் அமைக்கப்படும்.

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் நலனுக்காக இலவச நேப்கின் வழங்கும் இயந்திரங்கள் பொருத்தப்படும்.

ஆண்டுக்கு 28 பெண்கள் வீதம், 5 ஆண்டுகளில் 140 பெண் தொழில்முனைவோரை உருவாக்க தலா ரூ25,000 முதலீட்டு உதவித்தொகை (திரும்பச் செலுத்தத் தேவையில்லாதது) வழங்கப்படும்.

வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு வளைகாப்பு சீர் வரிசையாக ரூ5,000 நிதி உதவி வழங்கப்படும்.

தொகுதியின் முக்கிய சந்திப்புகளில் உயர்தர CCTV கேமராக்கள் மற்றும் நவீன தெருவிளக்குகள் பொருத்தப்படும்.

MLA அலுவலகத்தில் பெண்களால் நிர்வகிக்கப்படும் தனிப்பிரிவு தொடங்கப்பட்டு, புகார்களுக்கு 24 மணி நேரத்திற்குள் தீர்வு காணப்படும்.

தையல் மற்றும் அழகுக்கலை போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டு, பெண்கள் சுயதொழில் தொடங்க வழிவகை செய்யப்படும்.

குடும்பம் மற்றும் சமூகம் சார்ந்த பிரச்சனைகளுக்குப் பெண் வழக்கறிஞர்கள் மூலம் இலவச சட்ட உதவி வழங்கப்படும்.

நச்சுத்தன்மையற்ற காய்கறிகளை விளைவிக்க, இலவச மாடித்தோட்டப் பயிற்சி மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும்.

தெருவிளக்கு, குப்பை மேலாண்மை போன்ற அடிப்படைப் பிரச்சனைகளைத் தெரிவிக்கத் தனித் தொலைபேசி எண் அறிமுகப்படுத்தப்பட்டு, 24 மணி நேரத்தில் தீர்வு உறுதி செய்யப்படும்.

முத்தியால்பேட்டை தொகுதியின் ஒட்டுமொத்த வளர்ச்சியை முன்னிறுத்தி, "மாற்றத்திற்காக வாக்களியுங்கள்" என ஈரம் ராஜேந்திரன் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# புதுச்சேரி மாநில பாஜக துணைத் தலைவராக முன்னாள் எம்.எல்.ஏ பாஸ்கர் நியமனம்!



புதுச்சேரி, ஏப்.3–

புதுச்சேரி மாநில பாரதிய ஜனதா கட்சியின் புதிய மாநில துணைத் தலைவராக, முதலியார்பேட்டை தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பாஸ்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பை புதுச்சேரி மாநில பாஜக தலைவர் ராமலிங்கம் வெளியிட்டுள்ளார்.

கட்சியின் செயல்பாடுகளை மாநில அளவில் வலுப்படுத்தும் நோக்கில் இந்த புதிய நியமனம் மேற்கொள்ளப்பட் டுள்ளது.

முதலியார்பேட்டை தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய அனுபவம் கொண்ட பாஸ்கருக்கு, கட்சியின் முக்கியப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது தொண்டர்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. மாநிலத் தலைவர் ராமலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில், பாஸ்கரின் வருகை கட்சியின் வளர்ச்சிக்கு மேலும் வலுசேர்க்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் வளர்ச்சிப் பணிகளை முன்னெடுத்துச் செல்லும் வகையிலும், எதிர்வரும் அரசியல் சூழல்களைக் கருத்தில் கொண்டும் இந்த அதிரடி மாற்றத்தை மாநிலத் தலைமை மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பரிவட்டம் கட்டி LJK வேட்பாளருக்கு பாரம்பரிய வரவேற்பு "வெற்றி நிச்சயம்" என மக்களின் உறுதி



புதுச்சேரி, ஏப்.3–

லட்சிய ஜனநாயக கட்சி (லியிரி) வேட்பாளர் ஜோஸ் சார்லஸ் மார்டின் சங்கரதாஸ் நகர் ஜெயராஜ் தெருவில் வீடு வீடாகச் சென்று மக்களை சந்தித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டபோது, உள்ளூர் மக்கள் ஆர்வத்துடன் திரண்டு அவருக்கு ஆதரவு தெரிவித்தனர். அந்த நேரத்தில், அப்பகுதியைச் சேர்ந்த வெற்றிவேல் மற்றும் அவரது மனைவி உமாமகேஷ்வரி தம்பதியினர், பாரம்பரிய தமிழ் முறையில் பரிவட்டம் கட்டி வரவேற்றது சிறப்பு அம்சமாக அமைந்தது.

பரிவட்டம் கட்டுவது என்பது தமிழர் பண்பாட்டில் வெற்றி, மரியாதை மற்றும் பெருமையை குறிக்கும் ஒரு அடையாளமாக கருதப்படுகிறது. அதனை அணிவித்து வரவேற்ற தம்பதியினர், "நீங்கள் நிச்சயம் வெற்றி பெறுவீர்கள்" என்ற நம்பிக்கையுடன் வாழ்த்துகளை தெரிவித்தனர்.

இந்த நிகழ்வை தொடர்ந்து, வேட்பாளர் மக்களுடன் நேரடியாக கலந்துரையாடி, தொகுதியில் நிலவும் குடிநீர், சாலை வசதி, கழிவுநீர் வடிகால், தெருவிளக்கு உள்ளிட்ட அடிப்படை தேவைகள் குறித்து கேட்டறிந்தார். மேலும், தாம் தேர்ந்தெடுக்கப்பட்டால் இவ்வாறான பிரச்சினைகளை முன்னுரிமையுடன் தீர்ப்பதாக உறுதியளித்தார்.

அதோடு, பெண்கள் மற்றும் முதியோர்களுடன் தனிப்பட்ட முறையில் பேசி அவர்களுடைய கோரிக்கைகளையும் கேட்டறிந்தார். இளைஞர்கள் வேலைவாய்ப்பு, விளையாட்டு வசதிகள் போன்ற தேவைகளை முன்வைத்தனர்.

நிகழ்வின் இறுதியில், அப்பகுதி மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து வேட்பாளருக்கு ஆதரவு அளிப்பதாக உறுதி தெரிவித்தனர்.





தமிழக சட்டமன்றத் தேர்தல் கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டமன்ற தொகுதிக்கு சுயாட்சியாக போட்டியிடும் காட்டகரம் ஓம் சக்தி அம்மா கீதா அவர்கள் இன்று பர்கூர் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்பு மனுவினை தாக்கல் செய்தார் பின்பு திறந்த வெளி காரில் தனது பிரச்சாரத்தை தொடங்கினார் இதில் 500க்கும் மேற்பட்ட கிராம மக்கள் திரண்டு கீதா அவர்களுக்கு இசை மேலங்கள் முழுங்க மலர் தூவி தனது ஆதரவை தெரிவித்தனர் கொண்டனர் ஓம்சக்தி அம்மா கீதா அவர்களுக்கு தனது வாக்குகளை செலுத்தி அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வேண்டும் என முழக்கம் இட்டு ஆதரவனை தெரிவித்தனர்

# மு. க. ஸ்டாலின் ஆட்சி தொடர்வதற்கு உதய சூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும். திமுக வேட்பாளர் செஞ்சி மாஸ்தான் எம்.எல்.ஏ வேண்டுகோள்.



செஞ்சி,ஏப்ரல்.3

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி திமுக சார்பில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ மூன்றாவது முறையாக போட்டியிடுகிறார்.

செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர், ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமையில் செஞ்சி கிழக்கு ஒன்றியம் தென்புதுப்பட்டு, கொம்மேடு ஆகிய ஊராட்சியில் உதய சூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போது வாக்காளர்களிடம் மாவட்ட கழகசெயலாளர் திமுக வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ வாக்குசேகரித்து பேசுகையில்:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றவுடன் கடந்த 10 ஆண்டுகள் அதிமுக ஆட்சியில் செய்யாத பல்வேறு திட்டங்களை கடந்த ஐந்து ஆண்டுகளில் செய்து முடித்துள்ளார் தேர்தல் அறிக்கையில் சொன்ன திட்டங்களையும் சொல்லாத திட்டங்களையும் படிப்படியாக நிறைவேற்றி உள்ள தமிழ்நாடு முதலமைச்சர் தற்போது திமுக தேர்தல் அறிக்கையில் பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளார் அதில் முதலமைச்சரின்

காலை உணவு திட்டம் எட்டாம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்படும், மகளிர் உரிமைத் தொகை மாதம் 2000 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும் முதியோர் உதவித்தொகை 1200 லிருந்து 2000 ஆகவும், மாற்றுதிறனாளிகளுக்கு 1500 லிருந்து 2000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும், இல்லத்தரசிகள் திட்டத்தில் 8000 ரூபாய்வழங்கப்படும் என பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் அறிக்கையில் அறிவித்துள்ளார்.

தேர்தல் அறிக்கையில் சொன்னதையும், சொல்லாத திட்டங்களையும் செய்யக்கூடிய முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சி மீண்டும் தொடர்வதற்கு வாக்காளர்கள் ஆகிய நீங்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன், விழுப்புரம் மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ்சேரி கணேசன், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் சூரியமூர்த்தி, பாலப்பட்டு சண்முகம், சக்திவேல், முத்துலட்சுமி, தேமுதிக மாவட்ட பொருளாளர் தயாநிதி, நிர்வாகிள் அருள் முருகன், விஜி, மனோகர், பிரபு, வி.சி.க.மாவட்ட செயலாளர் சிவா,நன்மாறன், மதிமுக செயற்குழு உறுப்பினர் தேனன்,திமுக ஒன்றிய நிர்வாகிகள் வாசு, அய்யாதுரை, செல்வமணி, இக்பால், தென்புதுப்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் சிவக்குமார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சம்பத் குமார், துணைத் தலைவர் வேலுச்சாமி, கொம்மேடு கிளைச் செயலாளர் ஆல்பட், ஊராட்சி நிர்வாகிகள், மரிசிலின், ஸ்டாலின், ஆண்ட்ரூஸ் ஏழுமலை, அருண், உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் திமுக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

## செம்மண் குவாரி முறைகேடு வழக்கில் முன்னாள் அமைச்சர் பொன்முடி விடுவிப்பு!!

சென்னை: ஏப்.3–

செம்மண் குவாரி வழக்கில் இருந்து முன்னாள் அமைச்சர் பொன்முடி, அவரது மகன் கவுதம சிகாமணி உள்ளிட்டோர் விடுவிக்கப்பட்டுள்ளனர். வானூர் அருகே பூத்துறை செம்மண் குவாரியில் அளவுக்கு அதிகமாக செம்மண் அள்ளியதில் அரசுக்கு ரூ.28.36 கோடி இழப்பு ஏற்படுத்தியதாக தொடரப்பட்ட வழக்கில் போதிய சாட்சிகள் இல்லாத காரணத்தினால் 7 பேரையும் விடுதலை செய்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421